சுருக்கம்

பணியமைப்பு— சென்னை மாநகராட்சி—அரசிடமுள்ள கூடுதல் நிர்வாக அதிகாரங்களை மன்றம்/ஆணையருக்கு பகிர்ந்தளிப்பு செய்து ஆணைவெளியிடப்படுகிறது.

= = = = = = = = = = = = = = =

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.3) துறை**

**அரசு ஆணை (நிலை) எண். 181** **நாள் : 06 .10.2009**
**( திருவள்ளுவராண்டு 2040**
**புரட்டாசி மாதம், 20— ம் நாள்)**

**படிக்கப்பட்டது:**

1) சென்னை மாநகராட்சி ஆணையர் கடிதம் பொ.து.ந.க.எண்.ஜி2/25101/2009 நாள் 10.8.2009
2) சென்னை மாநகராட்சி மன்றத் தீர்மான எண்.345/09 நாள் 30.9.2009.

-----

ஆணை:

சென்னை மாநகராட்சியிலுள்ள வகுப்பு 1 முதல் 4 வரையுள்ள பதவிகளுக்கு, சில நேர்வுகளில், பதவி உயர்வு உறுதியாக்கம் செய்வது, பதவி உயர்வு அளிப்பது, ஒழுங்கு நடவடிக்கை நேர்வுகளில் இறுதி ஆணை வழங்குவது, வயது, தமிழ்மொழி மற்றும் பிற துறைத் தேர்வுகளில் தேர்ச்சிப் பெறுவதிலிருந்து தளர்வாணை மற்றும் பணி ஓய்வு அளிப்பது போன்ற அதிகாரங்கள் தற்சமயம் அரசிடமே உள்ளது.

2. இதனால் அரசுக்கு கூடுதல் பணிச்சுமையும், மேலும் மாநகராட்சியில் கோப்புகளின் மீது முடிவெடுப்பதில் காலதாமதமும் ஏற்படுகிறது. ஓய்வு பெற்ற சில பணியாளர்களின் கோப்புகளின் மீது அரசிடம் ஆணை எதிர்பார்த்திருப்பதால், ஓய்வு பெற்ற பணியாளர்களும் சிரமத்திற்கு ஆளாகின்றனர்.

3. இதனை தவிர்க்க தற்போது அரசிடமுள்ள சில அதிகாரங்களை, சென்னை மாநகராட்சி மன்றம்/ ஆணையர் அவர்களுக்கு அரசிடமிருந்து அதிகார பகிர்ந்தளிப்பு செய்யலாம் எனும் நோக்கத்தில் இனிவரும் காலங்களில் சென்னை மாநகராட்சியில் பணியமைப்பு சார்ந்த மேற்கூறப்பட்ட நிகழ்வுகள் குறுகிய காலத்தில் முடிக்க ஏதுவாக இருக்கும் என முடிவெடுத்து மன்ற தீர்மானம் எண்.345/09 நாள் 30.9.2009ல் மன்ற அனுமதியும் பெறப்பட்டுள்ளது.

4. தற்போது அரசிடமிருந்து சென்னை மாநகராட்சி மன்றம்/ஆணையருக்கு பகிர்ந்தளிப்பு செய்ய பரிந்துரைக்கப்படும் அதிகாரங்கள் கீழ்கண்டவாறு:-

| வ. எண் | பதவியின் பெயர் | அதிகார பகிர்ந்தளிப்பு செய்ய பரிந்துரைக்கப்படும் பொருள்கள் | தற்போதுள்ள அதிகாரம் யாரிடம் | இனிவரும் காலங்களில் அதிகாரம் பகிர்ந்தளிப்பு செய்ய வேண்டியது. |
|---|---|---|---|---|
| 1. | தலைமைப் பொறியாளர்கள் மேற்பார்வை பொறியாளர்கள், நகரமைப்பு பொறியாளர், சுகாதார அலுவலர், துணை திட்ட ஒருங்கிணைப்பாளர், வருவாய் அலுவலர், கல்வி அலுவலர். | 1.பணி நியமனம்,<br>2.ஓய்வு பெறுவதற் கான அனுமதி.<br>3.வெளிநாடு செல்ல, அனுமதி.<br>4.தமிழ்மொழி தேர்ச்சிப் பெறுவதிலிருந்து தளர்வாணை | 1. அரசு<br>2. அரசு<br>3. அரசு<br>4. அரசு | 1. அரசு<br>2. அரசு<br>3. அரசு<br>4. அரசு |
| 2. | முதன்மை கணக்கு அலுவலர்கள் மற்றும் மண்டல அலுவலர்கள் | 1..பணி நியமனம்,<br>2.ஓய்வு பெறுவதற் கான அனுமதி.<br>3.வெளிநாடு செல்ல, அனுமதி.<br>4.தமிழ்மொழி தேர்ச்சிப் பெறுவதிலிருந்து தளர்வாணை | 1. அரசு<br>2. அரசு<br>3. அரசு<br>4. அரசு | சென்னை மாநகராட்சி மன்றம்<br>சென்னை மாநகராட்சி மன்றம்<br>சென்னை மாநகராட்சி மன்றம்<br>சென்னை மாநகராட்சி மன்றம் |
| 3. | கூடுதல் கல்வி, வருவாய் மற்றும் சுகாதார அலுவலர்கள் சட்ட அலுவலர், மன்றச் செயலர், மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர், தலைமை பூச்சியியல் கட்டுப்பாட்டு அலுவலர். | 1..பணி நியமனம்,<br>2.பணி ஓய்வு.<br>3.வெளிநாடு செல்ல, அனுமதி. | மன்றத்தின் அனுமதியுடன் அரசின் உறுதியாக்கம் பெறவேண்டும்.<br>மன்றத்தின் அனுமதியுடன் அரசின் உறுதியாக்கம் பெறவேண்டும்.<br>மன்றத்தின் அனுமதியுடன் அரசின் உறுதியாக்கம் பெறவேண்டும். | சென்னை மாநகராட்சி மன்றம்<br>சென்னை மாநகராட்சி மன்றம்<br>சென்னை மாநகராட்சி மன்றம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 4.தன்விருப்ப ஓய்வில் செல்ல அனுமதி<br><br>5.தமிழ்மொழி தேர்ச்சிப் பெறுவதிலிருந்து தளர்வாணை | மன்றத்தின் அனுமதியுடன் அரசின் உறுதியாக்கம் பெறவேண்டும்.<br><br>மன்றத்தின் அனுமதியுடன் அரசின் உறுதியாக்கம் பெறவேண்டும். | சென்னை மாநகராட்சி மன்றம்<br><br>சென்னை மாநகராட்சி மன்றம் |
| 4. | கணக்கு அலுவலர்கள், உதவி வருவாய் மற்றும் சுகாதார அலுவலர்கள், கால்நடைப் பிரிவு மருத்துவ அலுவலர், அரங்க அலுவலர் பூங்கா கண்காணிப்பாளர், உதவி சட்ட அலுவலர், உதவி கோட்ட பொறியாளர், செயற்பொறியாளர், உதவி செயற்பொறியாளர், மருத்துவ அலுவலர், தலைமை பூச்சியியலாளர், கோட்ட மின் பொறியாளர் மற்றும் பல | 1..பணி நியமனம்,<br><br>2.தமிழ்மொழி தேர்ச்சிப் பெறுவதிலிருந்து தளர்வாணை | மன்றத்தின் அனுமதியுடன் அரசின் உறுதியாக்கம் பெறவேண்டும்.<br><br>மன்றத்தின் அனுமதியுடன் அரசின் உறுதியாக்கம் பெறவேண்டும். | சென்னை மாநகராட்சி மன்றம்<br><br>சென்னை மாநகராட்சி மன்றம் |
| 5. | கண்காணிப்பாளர், வரிமதிப்பீட்டாளர், பிரிவு மேலாளர்கள், உதவியாளர்கள், இளநிலை உதவியாளர்கள், தட்டச்சர்கள், சுருக்கெழுத்து தட்டச்சர்கள், சுகாதார ஆய்வாளர்கள், அடிப்படை சுகாதார பணியாளர்கள், பல்நோக்கு அடிப்படை சுகாதாரப் பணியாளர்கள், உதவி பொறியாளர்கள், இளநிலை பொறியாளர்கள், ஓட்டுநர் | 1. வயது மற்றும் தமிழ் பொழி மற்றும் துறைத் தேர்வுகளில் தேர்ச்சிப் பெறுவதிலிருந்து தளர்வாணை<br><br>2. ஓட்டுநர் பதவிக்கு கல்வித் தகுதி மற்றும் வயது தளர்வாணை<br><br>3. ஒழுங்கு நடவடிக்கை நேர்வுகளில் அடிப்படை விதி 18(1) மற்றும் (2) தளர்வாணை | அரசு<br><br>அரசு<br><br>அரசு | சென்னை மாநகராட்சி மன்றம்<br><br>நியமனக் குழு<br><br>ஆணையர் |
| 6. | அலுவலக உதவியாளர், சாலைப்பணியாளர், துப்புரவு பணியாளர், மலேரியா தூர்வாரும் பணியாளர் காவலாளி, மின் பணியாளர், பூங்கா பணியாளர், அரங்கத் தொழிலாளி, மலேரியா பணியாளர், தபேதார், ஜமேதார், இயந்திர பொறியியல் துறை தொழிலாளிகள் | 1. கல்வித்தகுதி மற்றும் வயது தளர்வாணை அளிப்பது<br><br>2.ஒழுங்கு நடவடிக்கை நேர்வுகளில் அடிப்படை விதி 18(1) மற்றும்(2) தளர்வாணை. | அரசு<br><br>அரசு | சென்னை மாநகராட்சி மன்றத்தின் ஒப்புதலுடன் ஆணை யருக்கு<br><br>ஆணையர் |

5. மேலே பத்தி 4–ல் பரிந்துரைத்துள்ளவாறு அதிகாரங்களை சென்னை மாநகராட்சி மன்றம்/ஆணையர் அவர்களுக்கு அதிகார பங்களிப்பு செய்ய உரிய ஆணை பிறப்பிக்குமாறு சென்னை மாநகராட்சி ஆணையர் அரசினைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

6. மேலே பத்தி 5–ல் உள்ள சென்னை மாநகராட்சி ஆணையரின் செயற்குறிப்பு அரசால் கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டு அதனை அவ்வாறே ஏற்றுக் கொண்டு ஆணையிடப்படுகிறது.

/ஆளுநரின் ஆணைப்படி/

**நிரஞ்சன் மார்டி,**
**அரசுச் செயலாளர்.**

பெறுநர்
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை–3.
இயக்குநர்,
உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறை, சென்னை.108.
நகல்–
செயலரின் தனிச்செயலர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை,
சென்னை–9.
மாண்புமிகு துணை முதலமைச்சரின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந2) துறை,
சென்னை–9
அனைத்து பிரிவுகள்/ நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை,
சென்னை–9.
இருப்புக் கோப்பு/ உதிரி நகல்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.